மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
E.A.No.12/2013 In E.P.No.9/2012

பெயர் : தமிழரசி
சாட்சி – ம.சா–1 நாள்: 25.08.2025

---

குறுக்கு விசாரணை (1ம் எதிர்மனுதாரர் தரப்பு)

1. மனுசொத்து எந்த ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு உரிமை உள்ளது என்றால் உயில் ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது. உயில் ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்துள்ளேன். உயிலின் அசலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 சொத்துக்கள் உள்ளதால் மற்றொரு சொத்தினை விற்பனை செய்யும் போது அந்த சொத்தை வாங்கி அவரிடம் கொடுத்து விட்டதாக சொன்னார்கள். அதனால் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்துள்ளேன்.

2. மற்றொரு சொத்தை விற்பனை செய்யும் போது அந்த ஆவணத்தில் உயிலின் அசல் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி உயில் செல்லத்தக்க ஆவணம் என்று நீதிமன்றம் மூலம் விளம்புகை செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மனு சொத்தின் விபரம் மேற்படி உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் மேற்படி உயிலை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

3. எனது கோரிக்கை மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரம் மேற்படி உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அசல் வழக்கு எண் 1100 / 2008 வழக்கு தீர்ப்பினை ரத்து செய்ய வேண்டும் என்று நீதிமன்றத்தில் வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு ரத்து செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ம.சா.ஆ.9 மின் கட்டண ரசீதில் மனுசொத்தின் கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் மனுசொத்தில் வசித்து வருகிறேன் என்பதற்கு ஆதார் அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. மனு சொத்து எனது பெயரில் உள்ளது என்பதற்கு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ம.சா.ஆ.8 தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ.8 வரி ரசீதில் ரங்கசாமி நாயுடு வீதி என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி ரங்கசாமி நாயுடு வீதியில் தான் மனுசொத்து உள்ளது என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆவணங்களில் ரங்கசாமி வீதி என்று தான் உள்ளது. ம.சா.ஆ.1 ஆவணத்தில் ரங்கசாமி என்று குறிப்பிட்டு நான் கிரயம் பெற்றுள்ளேன்.

5. மனு சொத்து சின்னசாமிக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றால் சரிதான் 4 பேருக்கு பாத்தியப்பட்டுள்ளது. சின்னசாமிக்கு மனுசொத்தை முழுவதுமாக எழுதிக் கொடுப்பதற்கு அவருக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சின்னசாமி வசந்திக்கு உயில் அடிப்படையில் பாத்தியப்பட்ட சொத்தில் இருந்து வாங்கியதையும், ராஜம்மாள் எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்டில் இருந்து வந்த சொத்தையும் எனக்கு கிரயம் கொடுத்துள்ளார்.

மேற்படி வகையில் பாத்தியப்பட்ட சொத்தினை தான் எனக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்று ம.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. ம.சா.ஆ.1 ஆவணத்தில் எனக்கு குடும்ப சொத்தில் இருந்து வந்த மொத்த சொத்தில் ஒரு பங்கை எழுதி வைப்பதாக ஏதேனும் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. ம.சா.ஆ.6 உயில் ஆவணத்தில் சொத்து விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் பட்டா எண் மற்றும் செக்கு பந்தி குறிப்பிடப்பட்டுள்ளது. உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டா எண் மற்றும் செக்கு பந்தி ஆகியவை மனுசொத்திற்கு உண்டானது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி உயிலை தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபணம் செய்த பின்னர் தான் உயில் மூலம் நான் உரிமை கோர முடியும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணத்தினை எழுதி வைக்க எனது தந்தைக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

7. நான் தாவா சொத்தில் வசிக்கவில்லை என்றும், தாவா சொத்திற்கும் எனக்கும் சம்பந்தம் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தினை சுவாதீனம் எடுக்க வந்த விவரம் எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் நீதிமன்றத்தில் இருந்து வந்தபோது எனக்கு தெரிய வந்தது. நீதிமன்ற ஊழியர்கள் சுவாதீனம் எடுக்க வந்தபோது வீடு பூட்டப்பட்டு இருந்தது என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும்,

நீதிமன்ற ஊழியர் வந்தபோது வீடு பூட்டப்பட்டு இருந்ததாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. நான் வீட்டில் இல்லாமல் முன்னுக்கு பின் முரணாக வீட்டில் இருந்தேன் என்றும், வேலைக்கு சென்று விட்டேன் என்றும், பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கின் தீர்ப்பை ரத்து செய்யாமல் நிறைவேற்று மனுவில் கேட்டுள்ள பரிகாரங்களை நான் தடை கோர முடியாது என்றால் சரியல்ல. இந்த மனுவை தவிர அசல் வழக்கின் தீர்ப்பை ரத்து செய்வதற்கு வேறு ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் வழக்கு தாக்கல் செய்தும், தீர்ப்புரை பிறப்பித்தும் 17 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால், காலவரையறை சட்டத்தால் எனது பரிகாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9. எனது அப்பா ம.சா.ஆ.1 கிரைய பத்திரத்தினை 2012 ஆம் ஆண்டு தான் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். அசல் வழக்கில் 2008 ஆம் ஆண்டே தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்புரையின் அடிப்படையில் நீதிமன்றம் 2009 ஆம் ஆண்டு ஒன்றாம் எதிர்மனுதாரர் பெயருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளது என்றால் சரிதான். எனவே நான் எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.08.25 17:35:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.